**நாள் 13.03.2024**

**OS No. 19/2015**

**வா.சா. 1, திருமதி. பிச்சம்மாள்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்குரை தபசில் சொத்தை நீங்கள் கிருஷ்ணம்மாள் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றதாக கூறியுள்ளீர்கள், மேற்படி கிருஷ்ணம்மாள் உங்கள் தகப்பனார் 1வது பிரதிவாதி கருப்பன் என்பவர் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். மேற்படி கிருஷ்ணம்மாள் என்பவருக்கு 09.05.1977 ஆம் தேதி ஊர்க்காரர்கள் சேர்ந்து கிரயம் கொடுத்ததாக நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் அந்த சொத்தின் விஸ்தீரனம் எவ்வளவு என்றால் 2 சென்ட் ஆகும். மேற்படி ஆவணத்தில் அந்த சொத்தின் கிழமேல் அளவு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிடப்பட்டுள்ளது. சாட்சியிடம் மேற்படி வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் காண்பிக்கப்பட்டது. மேற்படி கிரைய ஆவணம் வாதி தரப்பு வழக்கறிஞரின் முன்னிலையில் சொத்து விவரம் படித்துக் காண்பிக்கப்பட்டது. அதில் சொத்திற்குரிய எல்லைகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. கிழமேல், தென் வடல் அளவுகள் குறிப்பிடப்படவில்லை. நீங்கள் உங்கள் அத்தை கிருஷ்ணம்மாள் என்பவரிடமிருந்து கிரயம் பெற்ற வா.சா.ஆ. 2 கிரைய ஆவணத்திலும் எல்கைகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கிழமேல், தென்வடல் அளவுகள் குறிப்பிடப் படவில்லை என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 உத்தேச வரைபடத்திலும் நான்கு பக்க அளவுகள் குறிப்பிடவில்லை என்றால்

சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் கிழமேல் 25 அடியும், தென் வடல் 35 அடியும் என குறிப்பிட்டுள்ளீர்கள், அது எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் வீடு கட்டும்போது அளந்து போட்டோம். நீங்கள் அரசு நில அளவையரை கொண்டு அளவீடு செய்தீர்களா என்றால் சர்வேயரை வைத்துதான் அளந்தோம். உட்பிரிவு செய்து தனியாக உங்கள் பெயரில் பட்டா ஏதும் பெற்றுள்ளீர்களா என்றால் பெற்றுள்ளேன். நீங்கள் தனியாக உட்பிரிவு செய்யவில்லை என்றும், உங்கள் பெயரில் தனியாக பட்டா எதுவும் இல்லை என்றும், அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் பெயரில் தனியாக பட்டா உள்ளது. அதை கொடுத்துள்ளேன்.

3. நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 பட்டாவில் பிரதிவாதி பெயர் உட்பட பல நபர்களின் பெயர்கள் உள்ளது எனவும், அது தனிப்பட்ட பட்டா இல்லை என்றும் சொன்னால் நான் தனியாக பட்டா பெற்றுள்ளேன். இதே வழக்குரை தபசில் சொத்து குறித்து நீங்கள் அசல் வழக்கு எண்.116/2012 என்ற வழக்கை இதே பிரதிவாதிகள் மீது ஏற்கனவே தாக்கல் செய்திருந்தீர்கள் என்றால் ஆமாம். மேற்படி அசல் வழக்கு எண். 116/2012 வழக்கில் உள்ள சொத்தும், தற்போது இந்த வழக்கில் உள்ள சொத்தும் ஒரே சொத்து தான் என்றால் சரிதான். ஏற்கனவே நீங்கள் தாக்கல் செய்த வழக்கில் தீர்ப்பு பெற்ற பின்னர் அதே சொத்திற்காக மீண்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது முன் தீர்ப்பு தடையால் பாதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

4. அசல் வழக்கு எண். 116/2012 வழக்கில் வீட்டிற்கு கீழ்ப்பக்கம் உள்ள காலியிடம் என்று தான் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆமாம். தற்போது

அந்த காலி இடத்தையும் சேர்த்து தான் இந்த வழக்கில் பரிகாரம் கேட்கிறீர்கள் என்றால் ஆமாம். கிழமேல் 10 அடியும், தென் வடல் 15 அடி அளவில் வீடு உள்ளது. வீட்டின் தலைவாசல் வடக்கு நோக்கி உள்ளது. வீட்டிற்கு தென்பக்கம் கிழமேல் தெரு உள்ளது. நீங்கள் குறிப்பிட்டுள்ள அளவின்படி வீடு இல்லை என்றும், மேற்படி வீட்டை நீங்கள் கட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களில் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் குறிப்பிடாததால் அதனை உங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி இலத்தூர் பஞ்சாயத்தில் உங்கள் பெயரில் தீர்வை ஏற்படுத்தியுள்ளீர்கள் என்றும், அந்த தீர்வையின் அடிப்படையில் தபசில் சொத்தில் உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

5. நீங்கள் குறிப்பிட்டுள்ள வீட்டின் தலைவாசலுக்கு வடக்கு பக்கம் 2 வது பிரதிவாதிக்கு சொந்தமான காலியிடம் உள்ளது என்றால் சரிதான். வீடு 2 வது பிரதிவாதியால் கட்டப்பட்டு அனுபவம் செய்து வந்தது என்றும், தவறான ஆவணங்களின் அடிப்படையில் பஞ்சாயத்தார்களிடம் இருந்து உங்கள் பெயரில் தீர்வை ஏற்படுத்திக் கொண்டீர்கள் என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் மேற்படி வழக்குரை தபசில் சொத்தில் நீங்கள் குடியிருக்கவில்லை என்றும், வழக்குரையிலும் நீங்கள் கட்டளைகுடியிருப்பில் குடியிருப்பதாக தான் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நீங்கள் அந்த வீட்டில் அனுபவத்தில் இல்லை என்றும், தற்போது பொய்யாக கூறுகிறீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் நான்கு பக்க அளவுகள் குறிப்பிடாததால் இந்த இடத்தை நீதிமன்றம் மூலம் நீதிமன்ற ஆணையர்

நியமனம் செய்து பார்வையிட்டு அளவீடு செய்வதற்கு உங்களுக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் எனது வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும். நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் உங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

M SUNIL RAJA

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by M SUNIL RAJA
Location: Shencottah
Date: 2024.03.13 18:19:01 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai